சுருக்கம்

அரசு உதவி பெறும் கல்லூரிகள் – பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கும் சென்னை–30, பச்சையப்பன் ஆடவர் கல்லூரியினை இருபாலர் கல்லூரியாக மாற்றம் செய்ய அனுமதியளித்து – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

உயர் கல்வி (டி2) த் துறை

அரசாணை (நிலை) எண். 100

நாள்: 15.06.2026
பராபவ வருடம், ஆனி – 01
திருவள்ளுவர் ஆண்டு, 2057
படிக்கப்பட்டவை:–

கல்லூரிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண்.TNDCE/1956/2026–ஜி1, நாள் 22.05.2026

******

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர், பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் சென்னை–30, பச்சையப்பன் ஆடவர் கல்லூரியை இருபாலர் கல்லூரியாக செயல்பட அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார் என்றும் அக்கல்லூரியை ஆடவர் கல்லூரியிலிருந்து இருபாலர் கல்லூரியாக மாற்றுவது தொடர்பாக சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குரிடமிருந்து ஆய்வறிக்கை பெறப்பட்டது என்றும் அவ்வாய்வறிக்கையை பரிசீலிக்கப்பட்டதில் கீழ்காணும் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்:–

i. 17.12.2024 அன்று நடைபெற்ற அக்கல்லூரி குழு கூட்டத்தில் அக்கல்லூரியில் உள்ள அனைத்து முதுநிலை பாடப்பிரிவுகள், பட்டயப் பிரிவுகள் மற்றும் சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்திலும் இருபாலர் பயின்று வரும் நிலையில் தற்போது இளநிலைப் பாடப்பிரிவுகளையும் மாணவிகள் பயன்பெறும் வகையில் இருபாலர் கல்லூரியாக மாற்றுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ii. இக்கல்லூரியில் 12 இளநிலை பாடப்பிரிவுகள் உள்ளது.

iii. இக்கல்லூரியில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை இடங்களில் மாணவிகளை சேர்ப்பதால் அரசுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படாது என அக்கல்லூரி முதல்வரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

iv. இக்கல்லூரியில் இதற்கு முன்னரே நடைபெற்று வரும் பாடப்பிரிவுகளில் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளது.

v. பச்சையப்பன் கல்லூரியில் உள்ள முதுகலை பாடப்பிரிவுகள், பட்டயப் பிரிவுகள் மற்றும் சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்திலும் இருபாலர் பயின்று வருவதால் இளநிலை பாடப்பிரிவுகளையும் இருபாலர் கல்லூரியாக மாற்றி அமைப்பதால் மாணவிகளின் உயர்கல்விக்கு உறுதுணையாக இருக்கும்.

2. எனவே, பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கும் சென்னை–30, பச்சையப்பன் ஆடவர் கல்லூரியை இருபாலர் கல்லூரியாக 2026–2027–ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட அனுமதி வழங்குமாறு கல்லூரிக் கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஏற்று, பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கும் சென்னை–30, பச்சையப்பன் ஆடவர் கல்லூரியினை 2026–2027–ஆம் கல்வியாண்டு முதல் இருபாலர் கல்லூரியாக செயல்பட சார்ந்த, பல்கலைக்கழகத்தின் ஒப்புதலை பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதியளித்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி. அருண் ராய்
அரசு செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி ஆணையர், சென்னை–15.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், சென்னை.
(கல்லூரிக் கல்வி ஆணையர் வழியாக)
மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை.
பதிவாளர், சென்னை பல்கலைக்கழகம், சென்னை–05.
பச்சையப்பன் அறக்கட்டளை, பச்சையப்பன் கல்லூரி வளாகம்,
செனாய் நகர், சென்னை–30.(கல்லூரிக் கல்வி ஆணையர் வழியாக)
முதல்வர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை–30. (கல்லூரி கல்வி ஆணையர் வழியாக)
நகல்:
மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலர், உயர் கல்வித் துறை, சென்னை –9.
சுத்த நகல் கோப்பிற்கு(கோப்பு எண். 1640/டி2/2026)
இ.கோ/ உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

15/6/2026
பிரிவு அலுவலர்
15/06/2026